வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க. எண். 2040/ஆ2/2026 நாள் : .07.2026.

பொருள்: பள்ளிக் கல்வி – 2026–2027– பீடி/ Cine தொழிலாளர் கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் செய்யும் பணிகளை முடிக்க தெரிவித்தல் –சார்பு .

பார்வை: பீடி தொழிலாளர் நல நிதி மருந்தக பொது மருத்துவ அதிகாரியின் கடித ந.க.எண்.36/01/2026–27–29 நாள்: 02.07.2026.

-----

பார்வையில் காணும், கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 2026–27 ஆம் ஆண்டு– FINANCIAL ASSISTANCE FOR EDUCATION TO THE WARDS OF BEEDI/CINE/IOMC/LSDM– PRE MATRIC திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான 1 முதல் 10 ஆம் வகுப்பு பயிலும், மாணவ /மாணவியர்கள் National Scholarship Portal (http://scholarships.gov.in) என்ற இணையதள முகவரியில் புதிதாக விண்ணப்பிக்கும் பணிகளை 31.08.2026–க்குள் முடிக்க வேண்டும் என சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மாணவ/மாணவியர்களின் பெற்றோர் பீடி/ Cine தொழிலாளராக இருத்தல் வேண்டும்.
2. இத்திட்டத்தின் கீழ் புதிதாக விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு NSP இணையதளத்தில் ஒரு முறை பதிவு (One Time Registration–OTR) மேற்கொள்ள வேண்டும்.
3. ஏற்கனவே OTR எண் பெற்றவர்கள் NSP இணையதளத்தில் கல்வி உதவித் தொகைக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்.
4. **இத்திட்டதின் கீழ் மாணவர்கள் விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.08.2026.**

இப்பணி குறித்து இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் பெறப்பட்டால், அப்பள்ளித் தலைமையாசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் என்பதை திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி / இடைநிலை/தனியார் பள்ளிகள்) 31.08.2026 அன்று பள்ளிகள் வாரியாக பதிவுகள் மேற்கொண்ட விவரத்தினை இவ்வலுவகத்தில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. வழிகாட்டும் நெறிமுறை.
2. NSP இணைய வழியில் மாணவர்கள் பதிவுகள் மேற்கொள்ள வழிகாட்டும் காணொளி.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
(தொடக்கக் கல்வி /இடைநிலை/தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.
(தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு)
2. சார்ந்த உயர் /மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்/ மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.
(சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலமாக)